DEPOSITION OF WITNESS

---

IN THE COURT OF SUBORDINATE JUDGE, DEVAKOTTAI.

| | | |
|---|---|---|
| MCOP.No. | : | 61/2020 |
| Deposition of Witness for | : | P.W.1 |
| | : | D.W. |
| | : | R.W. |
| | : | Court. |
| Name | : | சதிஷ்குமார் |
| Father's Name | : | சரவணன் |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 25.09.2025

**முதல் விசாரணை:**

நான் மனுதாரர். நான் இத்துடன் தாக்கல் செய்துள்ள நிரூபணவாக்குமூலத்தை முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். எனது தரப்பு கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. 29.07.2018 ம் தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. 15.11.2018 ம் தேதியிட்ட குற்ற இறுதி அறிக்கை சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. TN 55 N 0724 என்ற அரசு பேருந்து வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. 16.10.2018 ம் தேதியிட்ட TN 67 BX 1009 என்ற யமஹா இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

5. 29.07.2018 ம் தேதியிட்ட காவல்துறை வரைபடம் சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

6. மருத்துவ பில்கள் அசல் **ம.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

7. காயச் சான்றிதழ் சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

8. டிஸ்சார்ஜ் சம்மரி (எண்ணிக்கை 3) அசல் **ம.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

9. மனுதாரரின் சம்பள சான்றிதழ் கணிணி பதிவிறக்க நகல் **ம.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (கணிணி பதிவிறக்க நகல் என்பதால் 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபிக்கப்படுகிறது).**

10. மனுதாரரின் TN 67 BX 1009 என்ற யமஹா இருசக்கர வாகனத்தின் செலவின் Quotation அசல் **ம.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

11. மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் அசலுடன் ஒப்பிடப்பட்டு **ம.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

12. 06.01.2022 ம் தேதியிட்ட எம்.,சி.ஓ.பி.எண்.644/2018 புதுக்கோட்டை கூடுதல் மாவட்ட நீதிமன்றம் தீர்ப்பு ஆன்லை நகல் **ம.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:**

1. நிரூபணவாக்குமூலத்தில் உள்ள தகவல்களை நான்தான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். விபத்து நடந்த தேதி, மாதம், வருடம் தெரியுமா என்றால் 29.07.2018 ம் வருடம் நடந்தது. TN 67 BX 1009 யமஹா எனக்கு சொந்தமான வாகனம் என்றால் சரிதான். விபத்தின்போது எனக்கு பாத்தியப்பட்ட வண்டியை ஓட்டியவர் ரமேஷ் என்றால் சரிதான். ரமேஷ் என்பவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் ரமேஷ் தலை கவசம் அணிந்திருந்தார என்றால் அணிந்திருந்தார். தலைகவசம் அணிந்திருந்ததை என் மனுவில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்த இடம் நான்குமுக்கு சாலை என்றால் சரிதான்.

2. நான்குமுக்கு சாலையில் எந்த வாகனமும் சென்றாலும் மெதுவாகத்தான் செல்லவேண்டும், ஸ்பீட் பிரேக் உள்ளது என்றால் எங்களுக்கு தெரியாது. 1ம் எதிர்மனுதாரர் கிழக்குபக்கம் திரும்பபோது சமிச்ஞை செய்துதான் திரும்பினார் என்றால்

சரியல்ல. வாகனத்தை ஓட்டிச் சென்ற ரமேஷ் தான் கவனிக்காமல் இந்த விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. நான் வேலை செய்ததாக சொல்லியுள்ள நிறுவனத்தில் எந்த தேதியில் வேலைக்கு சேர்ந்தேன் என்பது எனக்கு ஞாபகம் உள்ளதா என்றால் இல்லை. என்னிடம் காண்பிக்கப்படும் ம.சா.ஆ.5 ஆவணத்தில் நான் 2019 ல் வேலைக்கு சேர்ந்ததாக உள்ளது, ஆனால் விபத்து நடந்தது 2018 என்றால் சரிதான். அதனால் அதன் அடிப்படையில் வருமான இழப்பீடு கணக்கிடமுடியாது என்றால் சரிதான்.

3. விபத்தினால் ஏற்பட்ட காயங்கள் தற்போது எனக்கு ஆறிவிட்டது என்று சொன்னால் சரியல்ல. தற்போது நான் என்ன வேலை பார்த்து வருகிறேன் என்றால் பிரி லேன்சில் டிராப்பிக் டிசைனராக பணிபுரிந்து வருகிறேன். அதற்கு மாத சம்பளம் எவ்வளவு என்றால் சுமார் ரூ.10,000/– வரும். விபத்திற்கு முழு காரணம் வாகனத்தை ஓட்டிச் சென்ற ரமேஷ் தான் என்றால் சரியல்ல. விபத்து ஏற்படுத்திய ரமேஷ் என்பவர் மீதுதான் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான், அது முறையாக விசாரணை செய்யாமல் டிரைவர் கொடுத்த புகாரின் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்டது. முறையாக விசாரணை செய்யவில்லை என்பதற்கு நாங்கள் மேல் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான்.

4. எனக்கு ஏற்பட்ட இழப்பீட்டை 1, 2ம் எதிர்மனுதாரர் கொடுக்க கடமைப்பட்டவர்கள் அல்ல என்றும், 3ம் எதிர்மனுதாரர்தான் கொடுக்க கடமைப்பட்டவர் என்றும் சொன்னால் சரியல்ல. நான் நிரூபணவாக்குமூலத்தின் 8 வது பாராவில் 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவாலும், அதிவேகத்தாலும், என்னுடைய வாகனத்தின் ஓட்டுநரான விபத்தில் இறந்த ரமேஷின் அஜாக்கிரதையாலும் கவனக்குறைவாலும் அதிவேகத்தாலும் விபத்து ஏற்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். நான் பல்வேறு தலைப்பின் கீழ் கேட்டுள்ள இழப்பீட்டு தொகை எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

**3ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

1. TN 67 BX 1009 யமஹா எனக்கு சொந்தமான வாகனம் என்றால் சரிதான். என்னுடைய வாகனத்தின் காப்பீடு நிறுவனம் தான் 3ம் எதிர்மனுதாரர் என்று சொன்னால் சரிதான். எனக்கு ஏற்பட்ட காயத்திற்காக கம்பெனியில் முறையிட முடியும்

என்றும், நீதிமன்றத்தை நான் நாடமுடியாதும் என்றால் சரியல்ல. நான் எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு கம்பெனியில் இழப்பீடு வேண்டும் என விண்ணப்பம் எதுவும் கொடுத்துள்ளேனா என்றால் ஆமாம். என்னுடைய வாகனத்தை விபத்து சமயத்தில் ஓட்டிச் சென்ற ரமேஷ்க்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதால் இழப்பீடு கொடுக்கமுடியாது என்று சொல்லிவிட்டார்கள் என்றால் சரிதான்.

2. நான் வாகனத்தின் உரிமையாளர் என்பதாலும், நான் 3ம் தரப்பினர் இல்லை என்பதாலும் 3ம் எதிர்மனுதாரரிடம் விபத்து இழப்பீட்டினை கோரமுடியாது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி விபத்திற்கு அரசு பேருந்தினுடைய ஓட்டுநரின் கவனக்குறைவுதான் காரணம் என்றால் சரிதான். 3ம் எதிர்மனுதாரின் நிறுவனத்தை பொருத்து மனு தள்ளுபடிக்குரியது என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்). திருமதி.P.கலை, நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.